பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 17 சனிக்கிழமை 30.05.2020 கதிர் 206

## நுவரெலியாவில் திடீர் ஊரடங்கு!

கொழும்பு, மே 30

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு 12 மணிமுதல் நாளை 31ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

நேற்று மாலை இந்த திடீர் அறிவிப்பு பக்கம் 02 »

## கொரோனா இறக்குமதிக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்பு!

### ஐக்கிய மக்கள் சக்தி பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, மே30

இலங்கையில் கொரோனா வைரஸை இறக்குமதி செய்தமை தொடர்பில் ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பக்கம் 02 »

## அடுத்த வாரம் நல்ல தீர்ப்பு வழங்கும் உயர்நீதிமன்றம்!

### பொதுஜன முன்னணி நம்பிக்கை

கொழும்பு, மே 30

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் அடுத்த வாரம் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பு வழங்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செஹான் சேமசிங்க பக்கம் 02 »

## இது ரகசியம் அல்ல!

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை நல்ல ராசியான மருத்துவமனை போலும்.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் மூன்றாவது தடவையாக மூன்று குழந்தைகள் ஒரே பிரசவத்தில் அங்கு பக்கம் 02 »

# தீர்வு கிடைக்கும் வரைக்கும் அரசுடன் தொடர்ந்து பேச்சு!

## முடிவெடுத்தது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, மே 30

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கும் வரைக்கும் அரசுடன் தொடர்ந்து பேசுவது எனவும், தமிழர்சார் விடயங்கள் தொடர்பில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது எனவும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான கூட்டம், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது. பக்கம் 02 »

## 'இராணுவத்தினர் கொலைக்குற்றவாளி' இப்படிப் பெயர் வர அரசுதான் காரணம்

### சீறுகின்றார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, மே 30

ராஜபக்ஷ அரசின் பொறுப்பற்ற செயல்களினால் இறுதியில் இராணுவத்தினரே கொலைக் குற்றவாளி என்ற அவப்பெயரை சுமக்கின்றனர்.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான ஜாதிக பக்கம் 02 »

## 1,558 ஆக அதிகரித்தது கொரோனாத் தொற்று

### நேற்று 28 பேர் அடையாளம்

கொழும்பு, மே 30

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 28 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,530 இலிருந்து 1,558 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் நேற்றிரவு 11 மணிக்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் வெளிநாடுகளிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்களும், வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினரும் அடங்குகின்றனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 09 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதன்படி பக்கம் 02 »

## குவைத்திலிருந்து வந்தவர்களில் 324 பேர் கொரோனா நோயாளர்!

கொழும்பு, மே 30

வெளிநாட்டவர் 3 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்த 464 பேர் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் 324 பேர் குவைத்திலிருந்து வந்தவர்கள் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குவைத்திலிருந்து வந்த 324 பேரும் பக்கம் 02 »

## யாழில் 91,183 குடும்பங்களுக்கு 2 ஆம் கட்டமாக ஐயாயிரம் ரூபா

யாழ்ப்பாணம், மே 30

அரசால் வழங்கப்படும் இடர்கால இரண்டாம் கட்ட உதவித் தொகையான ஐயாயிரம் ரூபா நிதி இன்று வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 91 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார். பக்கம் 02 »

## ஜனாதிபதி கோட்டாபயவுடன் இந்திய தூதர் முக்கிய சந்திப்பு!



கொழும்பு, மே 30

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, கொரோனா தொற்றை எதிர்கொள்வதற்கு, இலங்கை பக்கம் 02 »

## சதிகாரக் கும்பலிடமிருந்து ஐ.தே.கவை மீட்கத் தயார்!

### ஐக்கிய மக்கள் சக்தி சூளுரை

கொழும்பு, மே 30

ஐக்கிய தேசியக் கட்சியில் சிலர் அரசுடன் அரசியல் இலாபம்தேடும் நோக்கில் இணைந்துகொண்டு தேர்தலின்போது ஐ.தே.கவைத் தோல்வியடையச்செய்வதற்காகவே முயற்சித்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், இந்தச் சதிகாரக் கும்பலிடமிருந்து ஐ.தே.கவை மீட்பதற்காகவும் தயாராக பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்துள்ளன.

கடந்த மாதம் ஒரு இளம் தாய் மூன்று குழந்தைகளைப் பெற்றார்.

கடந்த வாரம் இன்னொரு பெண் மூன்று குழந்தைகளைப் பிரசவித்தார். மூன்றும் ஆண் பிள்ளைகள்.

இப்போது நேற்று முன்தினம் இன்னொரு இளம் தாய் மூன்று குழந்தைகளை அங்கு பெற்றுள்ளார். தாயும் இரண்டுபெண்குழந்தைகளும், மற்றைய ஆண் குழந்தையும் நலமே உள்ளனர்.

முஸ்லிம் பிரதேசங்களில் பிறப்பு வீதம் அதிகம்தான். அதை இந்த முப்பிரசவங்கள் இன்னும் வேகப்படுத்தியிருக்கின்றன. அவ்வளவுதான்.

★ ★ ★

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் குழுவினர் 99 பேரை அக்கட்சி வெளியேற்றியது என அறிவித்தது அல்லவா?

இந்த அறிவிப்பை பெரிய ஜோக்' என்று விமர்சித்தார் சிங்கள ஊடகவியலாளரான எனது நண்பர் ஒருவர். ஏன் என்று கேட்டேன்.

ஐ.தே.கட்சியின் செயற்குழுவில் இருந்த 37 பேரும் இந்த விலக்கப்பட்ட உறுப்பினர்களில் அடங்குவராம். எஞ்சிய 28 செயற்குழு உறுப்பினர்களும் சேர்ந்து இந்த 37 பேர் உட்பட்ட 99 உறுப்பினர்களைக் கட்சியில் இருந்து விலக்கியுள்ளனர். கட்சியிலிருந்து அவர்களை விலக்கும் தீர்மானத்தை ஐ.தே.கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நேற்று தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடி செயற்குழு உறுப்பினர்கள் எடுத்த சமயம், இந்த 37 உறுப்பினர்களும் சஜித் அலுவலகத்தில் அவருக்கு முன்னாள் இருந்தனர். கட்சியின் சிறுபான்மை எண்ணிக்கையினர், பெரும்பான்மை எண்ணிக்கையினரை கட்சியிலிருந்து வெளியேற்றியமை பெரும் ஜோக்தானே என்றார் அவர்.

அவர் கூறிய தகவல் சரி என்றால் அது 'ஜோக்'தான். எனினும் அந்தத் தகவலை மிகத் துல்லியமானதா என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை.

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் கூட்டம் இரண்டாவது நாளாக நேற்று மாலை சம்பந்தன் ஐயாவின் கொழும்பு வீட்டில் நடைபெற்றது. சுமந்திரனுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அவரும் சென்றிருந்தார்.

சுமந்திரனின் சர்ச்சைக்குரிய சிங்கள மொழி மூல செவ்வி வெளியான பின்னர் – அவருக்கு எதிராகக் காட்டமான அறிக்கைகளை கூட்டமைப்புத் தலைவர்கள் பகிரங்கமாக வெளியிட்ட பிறகு – அவர்களை சுமந்திரன் நேருக்கு நேர் முகம் கொடுக்கும் சந்திப்பு. எள்ளும் கொள்ளும் வெடிக்கும் என எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி ஒன்றுமே நடக்கவில்லை.

மாறி மாறிச் செய்தி பிரசுரித்து, ஏற்றிவிட்டு, கொம்பு சீவிய ஊடகங்களுக்கு – ஊடகவியலாளர்களுக்கு – கொஞ்சம் ஏமாற்றம்தான்.

சுமந்திரன் மீது முதல் முதலில் அறிக்கை ஏவுகணையை ஏவிய ரெலோத் தலைவர் செல்வத்துக்கு இவ்விவகாரத்தில் சில இடைஞ்சல்கள், குற்ற உணர்ச்சி இருக்கும் என இப்பத்தியில் முன்னர் கோடி காட்டியிருந்தேன். அது வாசர்களுக்கு நினைவிருக்கக் கூடும்.

நேற்று சுமந்திரனை நேருக்கு நேர் முகம் கொள்ளும் சந்திப்பு என்பது செல்வத்துக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் நேற்றைய சந்திப்பில் அவர் மிஸ்ஸிங். வயிறு சுகமில்லை என்று கூறப்பட்டது. அப்படியே ஆகியிருக்கும் என நம்புவோம்.

நேற்று முன்தினம் நடந்த சந்திப்பில் சுமந்திரனுக்கு எதிராக மாவை, சித்தர், செல்வம் ஆகியோர் சம்பந்தனிடம் குற்றப்பத்திரம் வாசித்தமை பற்றிய செய்தி 'காலைக்கதிர்' இதழில் விலாவாரியாக வெளியாகியிருந்தது.

தமக்குக் கூட்டம் நடந்ததும் தெரியாது, கூட்டத்தில் நடந்ததும் தெரியாது என்றார் சுமந்திரன். ஏனையோர் தலையசைத்தனர். ஆகையால் உங்களில் யாரோதான் செய்தியை வெளியே கசிய விட்டிருக்கின்றார் கள் என்று கோடி காட்டினார் அவர். 'அப்படித்தான் இருக்க வேண்டும்' என்று தலையசைத்து சமாளித்தனர் ஏனையோர்.

சரி. இன்றைய(நேற்றைய) கூட்டத்தில் சுமந்திரனின் செவ்வி தொடர்பில் என்ன பேசப்பட்டது என்று கேட்கப்பட்டால் என்ன பதில் சொல்வது என்று ஒருவர் கேட்க, அது பற்றிப் பேசப்படவே இல்லை என்று கூறுவது என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

நேற்றுக் கூட்டம் முடிவடைந்ததும், கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனுடன் தொடர்பு கொண்டேன்.

*"உங்களின் சிங்கள மொழி செவ்வி தொடர்பாக என்ன பேசினார்கள்? குற்றம் சுமத்தினார்களா? நீங்கள் பதில் கொடுத்தீர்களா? "* – என்றெல்லாம் கேட்டேன்.

*''அது குறித்து எதுவும் பேசவேயில்லை."* – என்றார் சுமந்திரன்.

*"அந்தப் பதில் ஊடகங்களுக்கு சொல்வதாக நீங்கள் எடுத்த முடிவு. அதை விட்டு விட்டு, உங்கள் செவ்வி தொடர்பாக அங்கு பேசப்பட்ட விடயங்களைக் கூறுங்கள். "* – என்றேன்.

அவர் கிளிப்பிள்ளை மாதிரி பழைய பதிலையே சொன்னார்.

ஊடகப் பேச்சாளர் அப்படித்தான் இருக்கலாம்,இருப்பார் என்பது புரிந்தது.

*"மலிந்தால் சந்தைக்கு வரும். நாம் விலாவாரியாகப் பெற்றுப் பிரசுரிப்போம்."* – என்று சற்று சூடாக விட்டேன்.

*"அது உங்களைப் பொறுத்தது."* – என்று வெட்டினார் அவர்.

என்ன நடந்தது என்பது தொடர்பில் எனக்குக் கிடைத்த தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை. உறுதிப்படுத்தினால் விவரமாகப் பிரசுரிப்பேன்.

ஆனால் நேற்றைய கூட்டத்தில் சுமந்திரனுக்கு எதிரான விடயத்தை எல்லோரும் அமுக்கித்தான் வாசித்தார்கள் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

★ ★ ★

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான வழக்கு நாளை மறுதினம் உயர்நீதிமன்றத்தில் எடுக்கப்படவிருக்கின்றது. பூர்வாங்க விசாரணையில் அனைத்து மனுதாரர்கள் சார்பிலும் பதிலுரைதான் இனி மிச்சமாக உள்ளது. அதனை அனைத்துமனுதரர்கள் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனே நிகழ்த்தவிருக்கின்றார்.

அந்தச் சமயத்தில், நாடாளுமன்ற கலைப்பு வர்த்தகமானி அறிவித்தலின் இன்றைய பெறுமதி நிலை என்ன என்பதை நீதிமன்றத்துக்கு – ஐந்து நீதியரசர் ஆயத்துக்கு – விளக்குவதற்கு ஒரு தந்திரோபாய உத்தி சுமந்திரன் தரப்பினால் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படவிருப்பதாக அவர் சார்ந்த சட்டத்தரணி குழு மூலம் அறிய முடிந்தது.

அந்த உத்தி என்ன? நாளை இப்பத்தியில் விளக்குவேன் வாசர்களே....!

– மின்னல் –

## அடுத்த வாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. வைரஸைக் கட்டுப்படுத்த அரசு தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும். மக்களின் வாழ்வை நெருக்கடிக்குள்ளாகிப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நோக்கம் அரசுக்குக் கிடையாது.

தற்போது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலை விரைவாக நடத்தி பலமான அரசை ஸ்தாபிக்க மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பிற்போடும் விதமாகவே எதிர்த்தரப்பினர் செயற்படுகின்றார்கள். ஆணைக்குழுவின் செயற்பாடுகளும் இவர்களது நோக்கத்துக்குச் சாதகமாகக் காணப்படுகின்றன.

## யாழில் 91, 183...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொவிட் 19 தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு இடர் காலநிதியாக அரசினால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா முதலாம் கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு இரண்டாம் கட்டமாகவும் 5ஆயிரம் ரூபா நிதி வழங்கும் வேலைத் திட்டம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாம் கட்டம் ஐயாயிரம் ரூபா நிதியைப் பெற்றுக் கொண்ட ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 503 குடும்பங்களில் இன்றுவரை 91ஆயிரத்து 183 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் திணைக்களத்திலிருந்து எமக்கு நிதி விடுவிக்கும் ஒழுங்கின்படி நிதி பெறாதவர்களுக்கு அந்த நிதி வழங்கப்படும்.

எனவே மக்கள் இது தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. 5 ஆயிரம் ரூபா நிதியைப் பெறாதவர்கள் தங்களுடைய பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரின் அறிவுறுத்தலைப் பின்பற்றி அதனை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் – என்றார்.

## தீர்வு கிடைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அவர் உடல்நலக் குறைவால் இதில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் சமகால நிலைவரங்கள் தொடர்பில் பேசப்பட்டன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டமைப்பினர் அண்மையில் நடத்திய சந்திப்பு, அதில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு உள்ளிட்ட பிரதமரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் தயாரித்தல், இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் தொலைபேசியில் பேசிய விடயங்கள், புதிய இந்தியத் தூதுவருடன் கூட்டமைப்பினர் நேரில் சந்திப்பு நடத்தவுள்ளமை, அந்தச் சந்திப்பில் பேசப்பட வேண்டிய விடயங்கள் எனப் பல விவகாரங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

ஒருகட்டத்தில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வழங்கிய செவ்வி தொடர்பிலும், அதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்களினால் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்தும் பேசப்பட்டன. இதன்போது சுமந்திரன் தனது பக்க நியாயத்தை விளக்கினார். அதேவேளை, சம்பந்தனும் மாவை சேனாதிராஜாவும் தங்கள் நிலைப்பாடுகளை இதன்போது தெரிவித்தனர்.

இதேவேளை, கொரோனாத் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் ஜனாதிபதி – பிரதமர் தலைமையிலான அரசுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காண்பது தொடர்பில் நேரில் பேசுவது எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## 1, 558 ஆக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 745 இலிருந்து 754 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவால் இதுவரை பாதிக்கப்பட்ட 1,558 பேரில் தற்போது 794 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 75 பேர் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## 'இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது நல்லாட்சி காலத்தில் இராணுவத்தினருக்கு உரிய மரியாதையை வழங்கி வந்தோம். ராஜபக்ஷக்களின் கடந்த கால ஆட்சியில் இராணுவத்தினருக்குப் பொருத்தமற்ற விடயங்களைப் பொறுப்பளித்தபோது அவர்களுக்குக் கொலைக்குற்றவாளி என்ற பட்டமே இறுதியில் வழங்கப்பட்டது.

தற்போது சுகாதாரப் பிரிவுக்கு வழங்க வேண்டிய பொறுப்புக்களை இராணுவத்தினருக்குக் கொடுத்ததனால், அவர்களில் பலர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றமையுடன், பலரது விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. அத்துடன் சமூகத்தின் முன்னிலையில் இராணுவத்தினருக்கு இது தலைக்குனிவையும் ஏற்படுத்தியுள்ளது என்றார்.

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் பலர் கூடுவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனா இறக்குமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று கொரோனா வைரஸின் பரவலால் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். மத்திய கிழக்கு, குவைத், இத்தாலி போன்ற நாடுகளில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி இலங்கையர் பலர் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதன் உண்மைத் தகவலை வெளிவிவகார அமைச்சர் வெளிநாட்டுத் தூதரங்கங்களுடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்த வேண்டும்.

வெளிநாட்டிலுள்ள இலங்கை ஊழியர்களை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மிக ஆர்வமுடன் அழைத்து வந்த ராஜபக்ஷவினர் தற்போது தாமதித்திருப்பதற்கான காரணம் என்ன?

இலங்கையில் எவருக்குமே கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமல் இருந்தபோது விமான நிலையத்தை மூடிவைக்காமல் அதனைத் திறந்து வைத்திருந்தமையின் காரணமாகவே இங்கு வைரஸ் பரவல் ஏற்பட்டதுடன், மக்களும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸை இறக்குமதி செய்தமை தொடர்பில் ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண்டும். – என்றார்.

## ஜனாதிபதி கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு இந்தியா வழங்கி வரும் உதவிகளுக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியா– இலங்கை இடையில், எல்லா துறைகளிலும், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும், ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, பயங்கரவாதம் போன்ற பொதுவான அச்சுறுத்தல்களை முறியடிக்க, கூட்டாக முயற்சிகளை முன்னெடுத்தல், அனுபவ மற்றும் தகவல் பகிர்வு ஆகியன உள்ளிட்ட பாதுகாப்புத் துறைசார் ஒத்துழைப்புக்களை மேலும் வலுவாக்கும் வழிமுறைகள் குறித்தும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும், கலந்துரையாடியுள்ளனர்.

## சதிகாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றோம்.

– இவ்வாறு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

## குவைத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்தே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

# பாதிப்புற்ற தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு டக்ளஸ் அழுத்தம்



இலங்கையில் நடைபெற்ற யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் நிறைவடைது 10 வருடங்கள் கடந்துவிட்டது. இக்காலப் பகுதியில் இடையூறுகளுக்கும் அழுத்தத்திற்கும் உள்ளான தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இதுவரை நிவாரணங்கள் கிடைக்காத நிலையில் தமிழ் ஊடகவியலாளர்களும் அவர்களது குடும்பங்களும் இன்னமும் பல்வேறு அசௌகரியங்களுடனேயே உள்ளனர்.

இந்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களது வாழ்வியல் நலன்கருதி நிவாரணங்களை துரிதகதியில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அமைச்சரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருதிக் கொடைக்குக் கோரிக்கை யாழ். வைத்தியசாலை விடுக்கின்றது

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் கடந்த சில வாரங்களாக தேவையான குருதி போதிய அளவில் கிடைக்கவில்லை என்று யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதனால் குருதி கொடையாளர்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த சில வாரங்களாக இரத்த வங்கிக்கு தேவையான குருதி போதிய அளவில் கிடைக்கவில்லை.

இது தவிரவும் வழமையாக நடைபெறுகின்ற இரத்ததான முகாம்கள் தற்போதைய சூழ்நிலை காரணமாக நடைபெறவில்லை.

ஆகவே குருதிக் கொடையாளர்கள் வைத்தியசாலை இரத்த வங்கியை தொடர்பு கொண்டு குருதிக்கொடை செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன். எல்லா வகையான குருதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

0212223063, 0772105375 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு இரத்த தானம் செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மதுபானச்சாலைகள் 5,6 ஆம் திகதி பூட்டு

எதிர்வரும் 5,6 ஆம் திகதிகளில் மதுபான சாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் எதிர்வரும் 5,6 ஆம் திகதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்நாட்களில் மதுபான சாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

இதற்கு முன்னரும் கொரோனா பரவலால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மதுபானசாலைகளை பூட்டியமை குறிப்பிடத்தக்கது.

# குளத்தில் மூழ்கி மாணவன் சாவு!

ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முக்கறவெவ பிரதேசத்தில் குளத்தில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா அண்ணல் நகர் பகுதியைச் சேர்ந்த கிண்ணியா தேசிய பாடசாலை மாணவன் நஜிமுதீன் எம்.ரிஷாத் (வயது 17) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் கிண்ணியாவிலிருந்து, ஹொரவப்பொத்தானை பிரதேசத்திலுள்ள முக்கறவெவ பகுதிக்கு அவரது உறவினரின் வீட்டுக்கு நேற்று மாலை சென்றுள்ளார். அதன்பின்னர் குளத்தில் குளிக்கச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அவரின் சடலம் ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# தொண்டாவின் மகள் நாடு திரும்பியும் தந்தையைப் பார்க்க முடியாத இக்கட்டு

மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மூத்த மகள் கோதை நாச்சியார் தனது தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள முடியாத நிலையை எதிர்நோக்கியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடான மஸ்கட்டில் இருந்த கோதை இலங்கைக்குவர கடந்த இரண்டு நாள்களாக முயன்று வந்தார். இறுதியாக அரச உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நடவடிக்கையால் இந்தியா ஊடாக அவர் நேற்று அதிகாலை கொழும்பு வந்தடைந்தார்.

ஆயினும் நாடு திரும்பிய கோதை 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டு உள்ளமையால் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்த சோகமான நிலைமையை கருத்தில் கொண்டு அவரைத் தூர இருந்து தந்தையாரின் பூதவுடலைப் பார்க்க அனுமதிப்பதா என்று சுகாதார அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர் என அறிய முடிகின்றது.

# 274 இலங்கையர்கள் பெலாரஸில் இருந்து நாடு திரும்பினார்கள்












பெலாரஸில் சிக்கித் தவித்த மாணவர்கள் உட்பட 274 இலங்கையர்கள் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அவர்கள் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் யு எல் 1206 இலக்க விமானத்தில் பெலாரஸின் மின்ஸ்க் தேசிய விமான நிலையதில் இருந்து வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் வைத்துத் தொற்று நீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் இலங்கை இராணுவத்தால் தனிமைப்படுத்தப்படும் மையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

# தமிழ்க்குரல் சபேசன் காலமானார்



ஆஸ்திரேலியாவில் விக்ரோரியா மாநிலத்தில் மெல்பனை தளமாகக்கொண்டிருந்து இயங்கிய தமிழ்ச்சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் புனர் வாழ்வுக்கழகம், மற்றும் 3 CR வானொலி தமிழ்க்குரல் ஒலிப்பரப்புச்சேவை முதலானவற்றில் நீண்டகாலமாக ஈடுபட்டுழைத்திருக்கும் 'தமிழ்க்குரல்' சண்முகம் சபேசன் (வயது 66) நேற்று அதிகாலை மெல்பனில் காலமானார்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் மீது அதீத ஈடுபாடு காட்டிய சபேசன், தமிழீழத் தேசியத் தலைவர் மீது நீங்காப் பற்றுக் கொண்டிருந்தார். தலைவராலும் அவர் பெரிதும் மதிக்கப்பட்டார். புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்தும் பிரசாரத்தை சர்வதேச ரீதியில் முன்னெடுத்தவர் சபேசன் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிக விலைக்கு மது விற்ற வயோதிபர் கைது

யாழில் அதிக விலையில் மதுபானம் விற்பனை செய்த முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருபவை வருமாறு:

கோப்பாய் – உரும்பிராய் பகுதியில் அதிக விலையில் மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் முதியவர் இன்று அதிகாலையில் விவசாயிகளுக்கு 180 மில்லிலீற்றர் மதுபான போத்தல் ஒன்றினை 400 ரூபாவுக்கு விற்பனை செய்து வந்துள்ளார்.

சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கும் அதிக விலையில் மதுபானம் விற்க முற்பட்ட முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிவில் உடையில் சென்றவர்கள் பொலிஸார் எனத் தெரியாத நிலையில் மதுபானத்தை விற்க முற்பட்டுள்ளார்.

பொலிஸாரும் முதியவரிடம் அதிக விலை கொடுத்து மதுபானப் போத்தலை கொள்வனவு செய்பவர்கள் போல செயற்பட்டு முதியவரைக் கைது செய்துள்ளனர்.

அத்துடன் அவரிடம் இருந்து எட்டு 180 மில்லிலீற்றர் மதுபான போத்தல்களையும் தாங்கள் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரம்

'பூனை தன் கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டு போய் விட்டது என எண்ணுமாம்' – என்றொரு பேச்சு மொழி நம் மத்தியில் உள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் எவையும் இல்லை என 'த இந்து' நாளிதழுக்கு இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள பதிலை நோக்கும் போது இந்தப் பேச்சு மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு தான் கண்ணை மூடிக்கொண்டு விட்டால் உலகுக்கே எதுவுமே தெரியாமல் போய்விடும் என முட்டாள் பூனைபோல விடயங்களைக் கருதுகின்றது என்றே தோன்றுகின்றது.

இன்னொரு பழமொழியும் உண்டு. 'கணக்குப்பிள்ளை பேசக் கூடாது; கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' என்பது அது.

இலங்கை இராணுவம் யுத்தக் குற்றம் புரிந்தா, இல்லையா என்பதை இராணுவத் தரப்பைத் தலையில் தூக்கி வைத்து 'தேசக் காவலர்கள்', 'சுதந்திர புருஷர்கள்' என்று கொண்டாடும் பௌத்த, சிங்களப் பேரினவாதம் கூறக்கூடாது. தென்னிலங்கை மேலாண்மைவாதத்தைப் பொறுத்தவரை 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற கதை' மாதிரித்தான் இது.

சிறுபான்மை இன மக்களை கொன்றொழிக்க – அவர்களின் சுதந்திர எழுச்சியை ஈவிரக்கமற்ற முறையில் அடக்க – பேரினவாதம் கையாண்ட குரூர ஒடுக்குமுறை நடவடிக்கைகளே இன்று யுத்தக்குற்றங்களாக விவரிக்கப்படுகின்றன. தங்களுடைய இலக்கை அடைவதற்கு அந்தக் கொடூர முறைகளைக் கையாண்ட தமது தரப்பைப் பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டிய கட்டாய நிலையில் தென்னிலங்கைச் சிங்களம் உள்ளது. அதனால் 'கணக்குப்பிள்ளை' போல அது கதை விடுகின்றது. ஆனால் கணக்குப் புத்தகத்தில் உள்ள கணக்கின் விவரமோ வேறாக உள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா தரப்பினால் நடத்தப்பட்ட விசாரணைகள், அறிக்கைகள் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தாரளமாக இழைக்கப்பட்டமையை அம்பலப்படுத்தி நிற்கின்றன.

தருஸ்மன் குழு அறிக்கை உட்பட பல சர்வதேச அறிக்கைகள் இதனை ருசுப்படுத்தி நிற்கையில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்படவில்லை என இலங்கை அரசுத் தரப்புகள் கூறுவது பூனை தன் கண்ணை மூடிக் கொண்டு விட்டு பூலோகமே இருண்டு விட்டது என கூறுவதற்கு ஒப்பாம்.

யுத்தக் குற்ற விடயங்களில் இலங்கை அரசு தூங்குபவன் போல நடிக்கலாம். சர்வதேச தரத்திலான ஒரு விசாரணை நடத்தப்படுமானால் உண்மை அம்பலமாகும் என்பதால் அத்தகைய நடுநிலையான விசாரணைக்கு அது முட்டுக்கட்டை போட்டு மறித்து வருகின்றது.

அதை மறித்துக் கொண்டு – நீதி, நியாயமான விசாரணைக்கு தடை போட்டுக் கொண்டு – யுத்தக் குற்றமே நடக்கவில்லை என இலங்கை சாதிப்பது தூங்குவது போல நடிப்பதற்கு இணையாம்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவின் அறிக்கையில் மிகப்பெரிய வேடிக்கை என்னவெனில், எட்டுப் பொதுமக்களைக் கொலை செய்த படைவீரர் ரத்னாயக்காவுக்கு தண்டனை வழங்குவதற்கு 13 வருடங்கள் எடுத்த போதிலும், அந்த விடயத்தில் இலங்கை நீதிமன்றம் இன்னும் நியாயமான சந்தேகங்களைக் கொண்டுள்ளது என்று தெரிவித்து, ரத்தனாயக்காவுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பை நியாயப் படுத்த எத்தனிப்பதாகும்.

மூன்று நீதியரசர்களைக் கொண்ட ட்'ரயல் அட் பார்' நீதிமன்றம் சந்தேகத்துக்கு இடமின்றி அவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என்று தீர்ப்பளித்த பின்னர், மேன்முறையீட்டில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் ஏகமனதாக அந்த முடிவை உறுதி செய்த பின்பு, இன்னும் இவ்விடயத்தில் நீதித்துறைக்கு சந்தேகம் இருப்பதாகக் கயிறு திரிப்பது சுத்த அபத்தமாகும்.

உலகின் மிகக் கொடூரமான – அநாகரிகமான – மனித பண்பியல்புகளுக்கே ஒவ்வாத – மிக மோசமான – பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படை அதிகாரிகளினால் சித்திரவதை செய்யப்பட்டு பெறப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலங்களின் கீழ் பல டசின் பேர்களை பல்லாண்டு காலம் சிறைகளிலும், ஆயுள் தண்டனையிலும் முடக்கி வைத்துக் கொண்டு –

இன்னும் பல டசின் கைதிகளை விசாரணை இன்றியே இருபது வருடங்களுக்கு மேல் தடுத்து வைத்துக் கொண்டு –

கொடூரக் கொலைக் குற்றவாளியான படைச் சிப்பாய் ரத்னாயக்காவுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை ரத்து நடவடிக்கையை நியாயப்படுத்தும் இலங்கையின் போக்கை நோக்கும் போது ஒரே வசனம்தான் நினைவுக்கு வருகின்றது.

'பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!'

# போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் எதுவுமில்லை!

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு இப்படிக் கூறுகிறது

இலங்கை இராணுவத்திற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் எதுவுமில்லை என இலங்கை வலியுறுத்தியுள்ளது.

இந்து நாளிதழில் வெளியான கட்டுரையொன்று குறித்து அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

'இலங்கை யுத்த வீரர்களை இலக்கு வைப்பதை சகித்துக் கொள்ளாது – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ' – என இந்துவில் வெளியான விடயம் குறித்துத் தனது பதிலை ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ளது.

குறிப்பிட்ட செய்தியில் இலங்கையின் பல படைவீரர்கள் – குறிப்பாக சிரேஷ்ட அதிகாரிகள் – யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் யுத்தகுற்றங்களில் ஈடுபட்டனர் என குற்றம்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவு, எந்த ஆயுதமோதலின் போதும் தனிநபரின் மனித உரிமையை பேணுவது மழை காலத்தில் சேறு உருவாவதை தடுப்பதை போன்ற விடயம் எனத் தெரிவித்துள்ளது.

யுத்தங்களின் கொந்தளிப்பான நிலை காரணமாக சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் ஒருவர் பின்பற்றவேண்டிய தெளிவான விடயங்களை முன்வைக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை படையினர் யுத்த குற்றங்களில் ஈடுபட்டனர் என எந்த உத்தியோகபூர்வ ஆவணமும் நிருபிக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எட்டுப் பொதுமக்களை கொலை செய்த படைவீரர் ஒருவருக்கு ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தமை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்தும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

ரத்னாயக்கவிற்கு தண்டனை வழங்குவதற்கு 13 வருடங்கள் எடுத்த போதிலும் இலங்கை நீதிமன்றம் இன்னும் நியாயமான சந்தேகங்களை கொண்டுள்ளது எனஜனாதிபதிஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

இலங்கை 14,500 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களிற்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தது அவர்கள் மத்தி யில் ரத்னாயக்க போன்று மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் உள்ளனர் என தெரிவித்துள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதன் காரணமாக மன்னிப்பு வழங்குவது நியாயமற்றதோ அல்லது ஒழுக்கமற்றதோ இல்லை என குறிப்பிட்டுள்ளது.

இலங்கை இராணுவதளபதி யுத்தகுற்றச்சாட்டிற்கு உள்ளான ஜெனரல் என தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் நியாயமற்றது எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# பொதுத்தேர்தலை எதிர்கொள்ள எதிரணிக்குத் திராணியில்லை!

## நீதிமன்றத்தை நாட இதுவே காரணம் என்கிறது ராஜபக்ஷ அணி

பொதுத்தேர்தலை எதிர்கொள்ள முடியாத நிலையிலேயே எதிர்த்தரப்பினர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை, பொதுத்தேர்தலுக்கான திகதி குறிப்பு ஆகியவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடினார்கள்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுத்தேர்தலில் வெற்றியை இலக்காகக் கொண்டு நாடு தழுவிய ரீதியில் கூட்டங்களை நடத்த வேண்டிய தேவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குக் கிடையாது.

இலத்திரனியல் நவீன சாதனம் ஊடாகத் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலைப் பாதுகாப்பான முறையில் நடத்த வேண்டும் என்பதே எமது எதிர் பார்ப்பாகும்.

மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே பொதுத்தேர்தலைப் பிற்போட நீதிமன்றத்தை நாடினர் என எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகின்றார்கள். நல்லாட்சி அரசில் ஏப்ரல் 21 ஈஸ்டர் தினக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தை ஒருபோதும் மறக்க முடியாது.

தேசியப் பாதுகாப்புக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி முன்னுரிமை வழங்கும் என்ற நம்பிக்கையிலேயே பெரும்பாலான மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைத் தோற்றுவித்தார்கள். எக்காரணிகளுக்காகவும் மக்களின் பாதுகாப்பை அரசு அலட்சியப்படுத்தாது.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திகதி அறிவிக்கப்பட்டால் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இடம் பெறும். இதனால் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடையும் எனத் தேர் தல்கள் ஆணைக்குழு அச்சம் கொள்கின்றது – என்றார்.

# யாழ். பரமேஸ்வராச் சந்தி விபத்தில் டிப்பர், கார்,மோ.சைக்கிள்கள் சேதம்





யாழ்ப்பாணம், மே 30

யாழ்.பலாலி வீதியில் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் நேற்றுப் பகல் டிப்பர், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை மோதி பாரிய விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருநெல்வேலி பரமேஸ் வரா சந்திக்கு அண்மையில் பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் காருடன் மோதி பாரிய விபத்தைத் தவிர்க்க முற்பட்ட வேளை வீதியை விட்டு விலகியதில் வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் மேதியுள்ளது.

இதனால் ஏற்படவிருந்த பாரிய உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்தில் பாரிய சேதத்தை எதிர்கொள்ளவிருந்த கார் தெய்வாதீனமாக சிறு சேதாரங்களுடன் தப்பித்துக் கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொரோனாவால் இந்த ஆண்டுக்குள் 8.5 கோடி சிறுவர்கள் வறுமைக்குள்

கொரோனா வைரஸ் இந்த ஆண்டு இறுதிக்குள் 8.வ கோடி குழந்தைகளை வறுமையில் தள்ளும் என்ற தகவல், புதிய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் உலக நாடு களையெல்லாம் கதி கலங்க வைத்து வருகிறது. நேற்றுப் பிற்பகல் நிலவரப்படி இந்தத் தொற்று நோய் உலக மெங்கும் சுமார் 200 நாடுகளில் 59 லட்சத்துக்கு மேற் பட்டோரை தாக்கி உள்ளது.

இந்த வைரஸ் தாக்கி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கையும் 3 லட்சத்து 56 ஆயிரத்தை கடந்துள்ளது.

இந்த வைரஸ் பரவலை தடுக்க உலக நாடுகள் போட்ட ஊரடங்கால் பொருளாதாரம் முடங்கி உள்ளது. வாழ்வாதாரங்கள் பறி போய் உள்ளன.

இந்த நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் குழந்தைகளின் நிலை குறித்து ஐ.நா.



குழந்தைகள் அமைப்பான யுனிசெப்பும், மனிதாபி மான அமைப்பான 'சேவ் தி சில்ட்ரன்' அமைப்பும் கூட்டாக ஒரு ஆய்வு நடத்தி உள்ளன.

இந்த ஆய்வில் அம்பலத்துக்கு வந்துள்ள முக்கிய தகவல்கள் இவை:-

குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் 8 கோடியே 60 லட்சம் குழந்தைகளை இந்த ஆண்டு இறுதிக்குள் வறு மையில் தள்ளும். இதன்மூலம் இப்படி வறுமையில் தவிக்கிற குழந்தைகளின் எண்ணிக்கையானது, 15 சதவீதம் அதிகரித்து 67 கோடியே 20 லட்சமாக உயரும்.

இந்த எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்கு குழந்தைகள் சகாரா ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியா பகுதி களில் வாழ்கின்றனர். ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா முழுவதும் உள்ள நாடுகளில் மிக குறிப்பிடத்தக்க அள வில் அதிகரிப்பு காணப்படுகிறது. ஏறத்தாழ 44 சதவீதம் பேர் இந்த நாடுகளில் உள்ளனர். லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 22 சதவீதம் அதிகரிப்பு உள்ளது.

அந்த அறிக்கையில் அவர், கொரோனா வைரஸ் தொற்று நோய் இதுவரை இல்லாத அளவில் சமூக பொருளாதார நெருக்கடிகளை தூண்டி உள்ளது. இது உலகெங்கும் உள்ள குடும்பங்களுக்கான வளங்களை வடிகட்டுகிறது என கூறி உள்ளார் யுனிசெப் அமைப் பின் நிர்வாக இயக்குனர் ஹென்றிட்டா போர் .

## அமெரிக்காவின் சோகமான சாதனை அதிபர் டிரம்ப் டுவிட்டரில் பதிவு



அமெரிக்காவில் கொரோனாவால் ஒரு லட்சம் பேர் உயிரிழந்திருப்பது சோகமான சாதனை என்று அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது டுவிட்டர் பதிவில் வேதனையோடு தெரிவித்திருக்கிறார்.

உலக அளவில் கொரோனாவால் பாதிக்கப்பட் டோரின் எண்ணிக்கை 59 லட்சத்தை நெருங்கி உள்ளது. கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 லட்சத்து 58 ஆயிரமாக உள்ளது.

அமெரிக்காவில் கொரோனா வைரசால் உயிரி ழந்தோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது. ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 197 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண் ணிக்கை 17 லட்சத்து 47 ஆயரத்து 781 ஆக உள் ளது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 90 ஆயிரத்து ,356 ஆக உள்ளது. தற் போது சிகிச்சையில் இருப்பவர்கள் எண்ணிக்கை 11 லட்சத்து 55 ஆயிரத்து 238 ஆக உள்ளது.

இதனைத்தொடர்ந்து ஸ்பெயின், பிரேசில், ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா, துருக்கி, ஈரான், சீனா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

இந்தநிலையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் "கொரோனாவால் ஒரு லட்சம் பேரை இழந்திருக்கிறோம் என்ற சோகமான சாதனையை எட்டியுள்ளோம். கொரோ னாவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு என்னுடைய மனமார்ந்த இரங்கலைத் தெரிவித் துக் கொள்கிறேன். கடவுள் எப்போதும் உங்களு டன் இருப்பாராக" - எனப் பதிவிட்டுள்ளார்.

## ஒரே நாளில் பிரேஸிலில் 24,000 பேருக்கு தொற்று

பிரேசில் நாட்டில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு ஒரே நாளில் 24 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு அடைந்துள்ளனர்.

கொரோனா வைரசின் தாக்கம் உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்காவை தொடர்ந்து, பிரேசில் இரண்டாம் இடத் தில் உள்ளது. பிரேசில் நாட்டில் கொரோனா வைரஸ் தாக் குதலுக்கு ஒரே நாளில் 24 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு அடைந்துள்ளனர். அங்கு கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை 4 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

இதேபோல், பிரேசிலில் கொரோனா வைரசுக்கு உயி ரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆயிரத்தை நெருங்கி யுள்ளது. கொரோனாவில் இருந்து குணமடைந்தோர்



எண்ணிக்கை ஒரு லட்சத்து 93 ஆயிரத்தைத் தாண்டி யுள்ளது.

## 59 லட்சத்தைக் கடந்தது உலகப் பெருந்தொற்று



உலகம் முழுவதும் கொரோனா வைரசால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 59 லட்சத்தை கடந்து 60 லட்சத்தை நெருங்கி வருகின்றது.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு இறுதி யில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற் போது உலகின் 215 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண் ணிக்கை 59 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு குண மடைந்தோர் எண்ணிக்கை 25.77 லட்சத்தைக் கடந் துள்ளது.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 53 ஆயிரத்துக்கு 975க்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா வைரசுக்கு உலகம் முழுவதும் 3 லட்சத்து 61 ஆயிரத்துக்கும் அதி கமானோர் உயிரிழந்துள்ளனர்.

## சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் உத்தரவில் கையெழுத்திட்டார் பிரதமர்

சமூக ஊடக நிறுவனங்களை கட்டுப்படுத் தும்வகையில்டிரம்ப்கையெழுத்திட்ட செயலாக்க ஆணை சட்டரீதியிலான சவால்களை எதிர் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தவறான தகவல்களை டுவிட்டரில் பதிவு செய்ததை டுவிட் டர் நிறுவனம் அம்பலப்படுத்தியது. இதற்கு பதி லடி கொடுத்த டிரம்ப், தங்கள் குரல்களை சமூக ஊடகங்கள் முடக்கப் பார்ப்பதாக கூறி எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், சமூக ஊடக இணைய தளங்களுக்கு இருக்கும் சில சட்டப்பூர்வ பாது காப்புகளை நீக்க வகை செய்யும் செயலாக்க ஆணையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட நிறுவனங்கள் தங்களது தளங்களில் பதியப்படும் உள்ளடக் கங்களை மேற்பார்வை செய்யும் விதத்திற் காக அவற்றின் மீது சட்டரீதியிலான நடவடிக் கையை அரசு எடுப்பதற்கு இது வழிவகை செய்கிறது.

அதேசமயம் இந்த செயலாக்க ஆணை சட்டரீதியிலான சவால்களை எதிர்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சமூக ஊடக இணையத்தளங்களுக்கான பாதுகாப்புகள் குறித்த தற்போதைய சட்டரீதி யிலான புரிதலை மாற்றும் பணியில் அமெ ரிக்க நாடாளுமன்றம் அல்லது நீதி அமைப்புகள் ஈடுபட வேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு ரஷ்யாவில் திடீர் ஒத்திவைப்பு

ரஷ்யாவில் நடைபெற இருந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு கொரோனோ தாக்குதல் காரணமாக ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து அரசியல், பொருளாதாரம் மற்றும் ராணுவ ஒத்துழைப்புக்கான அமைப்பை ஏற்படுத்தி உள்ளன. இது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்று அழைக்கப்படுகிறது.

ரஷியாவில் உள்ள ஜெயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் வருகிற ஜூலை 22 மற்றும் 23ஆம் திகதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டை நடத்த முடிவு செய்யப்பட்டு இருந்தது.

தற்போது உலக அளவில் பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ள கொரோனோ தாக்குதல் காரணமாக இந்த மாநாடு ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதன் உறுப்பு நாடுகள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் இந்த மாநாட்டை தள்ளி வைக்க முடிவு செய்யப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# இந்தியாவில் தாக்குதலை தொடங்கின வெட்டுக்கிளிகள்

இந்தியாவில் எச்சரிக்கப்பட்ட படியே வெட்டுக்கிளிகளின் தாக்குதல் பெருமெடுப்பில் தொடங்கியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு வெட்டுக்கிளிகள் தற்போது இந்தியா நோக்கி படையெடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ராஜஸ்தான் மாநிலம் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த வெட்டுக்கிளிகள் தற்போது பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் மாநிலத்தில் அதிகமான அளவில் பரவி உள்ளது.

இதனால் விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். பயிர்களை நாசமாக்கிவிட வாய்ப்புள்ளதால் அதை விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீயணைப்புப் படையினர் வெட்டுக்கிளிகளை அழிப்பதற்குத் துணைக்கு அழைக்கப்படுகின்றனர். தண்ணீரைப் பீச்சியடிக்கும் வண்டிகளைக் கொண்டு வெட்டுக்கிளிகளை வீழ்த்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. ஆனாலும் அவை கட்டுக்கடங்காமல் பயிர்களைத் துவம்சம் செய்து வருகின்றன.

ராஜஸ்தான் மாநிலத்தின், பல்வேறு மாவட்டங்களில் வெட்டுக்கிளிகள் பரவியுள்ளன. மத்திய வேளாண் அமைச்சகம் வழங்கிய ட்ரோன்கள் மூலம், விவசாய நிலத்தில் மருந்து தெளித்து வெட்டுக்கிளிகளை அழித்துவருகின்றனர்.

உத்தர பிரதேச மாநிலம் ஜான்சி மாவட்டத்தில் வெட்டுக்கிளிகள் தாக்கத்தொடங்கி உள்ளன. இரண்டு கிராமங்களில் வெட்டுக்கிளிகளை அழிக்க வேளாண்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டனர். குறிப்பாக இரவு நேரத்தில் வெட்டுக்கிளிகள் ஓய்வெடுக்கும் போது மருந்துதெளித்து அவற்றைஅழித்து வருகின்றனர்.

“வெட்டுக்கிளிகளின் கூட்டம் ஜான்சியைத் தாக்கியது. வெட்டுக்கிளிகளை அழிக்க தஹ்ராலி பகுதியில் உள்ள 2 கிராமங்களில் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

பகல் நேரங்களில் வெட்டுக்கிளிகளை விரட்டியடிக்க அதிக சப்தம் எழுப்பும்படி விவசாயிகளை அறிவுறுத்தி உள்ளோம். அத்துடன் இரவு நேரத்தில் வெட்டுக்கிளிகள் எந்த பகுதியில் ஓய்வெடுக்கின்றன என்பது பற்றி உடனடியாகக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கும்படி கூறியிருக்கிறோம்” என்றார் மாவட்ட ஆட்சியர் ஆன்ட்ரே வம்சி.

கிருமி நாசினிகளைப் பெருமளவில் விசிறியும் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென மாநிலங்களில் சிறப்பு அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வெட்டுக்கிளிகள் மகாராஷ்டிரா மாநிலத்துக்குள்ளும் புகுந்துவிட்டன.

விதர்பா பகுதியில் உள்ள நாக்பூர் மாவட்டத்தின் கட்டோலி தாலுகாவில் உள்ள பெட்ரி, கன்காவ் மற்றும் வார்தா மாவட்டத்தின் அஸ்தி தாலுகாவில் வெட்டுக்கிளிகள் ஒரேஞ்சு பயிர் மற்றும் காய்கறி பயிர்களை சேதப்படுத்தின.

தேமனி கிராமத்தில் ஒரு கி.மீ. சுற்றளவில் உள்ள மரங்களில் லட்சக்கணக்கான வெட்டுக்கிளிகள் கொத்து, கொத்தாக அமர்ந்து இருந்தன. இதையடுத்து தீயணைப்பு படை வீரர்கள் உதவியுடன் பூச்சி கொல்லி மருந்து அடிக்கப்பட்டன.

இதில் பல வெட்டுக்கிளிகள் செத்து கீழே விழுந்தன. மரங்களின் இலைகளை நாசப்படுத்திய இந்த கொடிய பூச்சிகள், பழங்களை சேதப்படுத்தவில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் இருந்து இங்கு வெட்டுக்கிளிகள் படைபெயடுத்து உள்ளதாக பண்டாரா மாவட்ட நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

கோண்டியா மாவட்டத்தை நோக்கி தற்போது இவை முன்னேறி செல்வதாகவும், அதனை எதிர்கொள்ள தயாராக இருக்கும்படி மாவட்ட



நிர்வாகம் வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே மும்பையை அடுத்த பால்கர் மாவட்டத்துக்குள் வெட்டுக்கிளிகள் நுழைவதை உன்னிப்பாக கவனித்து அதனை விரட்ட தயாராக இருக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் வேளாண் அதிகாரிகளை மாவட்ட கலெக்டர் கைலாஷ் ஷிண்டே அறிவுறுத்தி உள்ளார். குஜராத்தில் இருந்து அதன் எல்லையில் உள்ள தலசாரி, தகானு, ஜாவ்கர் ஆகிய தாலுகாக்களில் வெட்டுக்கிளிகள் நுழைய வாய்ப்பு இருப்பதாக மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

வெட்டுக்கிளிகளால் விமானத்தை இயக்குவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. லட்சக்கணக்கான வெட்டுக்கிளிகள் படையெடுப்பதால் விமானம் தரையிறங்கும்போது மிகவும் கவலை அளிக்கும் விதமாக உள்ளதாக இருக்கும். இதனல் விமானிகள் மற்றும் பொறியாளர்கள் கவனமாகச் செயல்பட வேண்டும் என விமான போக்குவரத்து பொது இயக்குனரகம் (DGCA) விமான நிறுவனங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது.

“மிகவும் சிறிய அளவில் இருக்கும் தனிப்பட்ட வெட்டுக்கிளி கூட விமானத்தின் கண்ணாடியில் மோதி விமானியின் பார்வையில் பாதிப்பை ஏற்படுத்த முடியும். இதனால் விமானத்தை இறக்குவது, மேலே எழுப்புவது என்பன மிகப்பெரிய கவலை அளிப்பதாக இருக்கும்” என்று கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மிகப்பெரிய கூட்டமாக தரையில் நீண்ட தூரத்திற்கு பரவிக்கிடக்க வாய்ப்புள்ளது. அப்போது அது குறித்து அறிந்திருக்க விமானிகள் விஷுவல் பிளைட் ரூல்ஸ் தேவைப் படும்.

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள், தங்கள் ஏரோட்ரோம் அருகே வெட்டுக்கிளி இருப்பதை அறிந்தால், தரையிறங்கும் மற்றும் புறப்படும் அனைத்து விமானங்களுக்கும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முடிந்த அளவிற்கு வெட்டுக்கிளிகள் அதிகமாக காணப்பட்டால், அவற்றை தவிர்த்து விட வேண்டும். இரவு வெட்டுக்கிளிகள் படையெடுக்காது என்பதால் விமானிகள் அச்சம் இல்லாமல் விமானத்தை இயக்கும் வாய்ப்பு உள்ளது.என்றும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழகத்தில் தொற்று நேற்று 20 ஆயிரத்தை தாண்டியது

தமிழகத்தில் இன்று ஒரே நாளில் 874 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதால் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

தமிழகத்தில் கடந்த முதலாம் திகதியில் இருந்து நாள்தோறும் 500க்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று 827 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று 874 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஒரே நாளில் அதிக தொற்று கண்டறியப்பட்டது இதுதான் முதல் முறை. இதன் மூலம் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 246 ஆக உயர்ந்துள்ளது.

இன்று 765 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனால் இதுவரை மொத்தம் 11 ஆயிரத்து 313 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

8 ஆயிரத்து 776 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இன்று 9 பேர் உயிரிழந்ததால் மொத்த எண்ணிக்கை 154 ஆக உயர்ந்துள்ளது.

# ஜூன் முதலாம் திகதி முதல் ஆலயங்கள் அனைத்துமே மேற்குவங்கத்தில் திறப்பு

மேற்கு வங்காள மாநிலத்தில் ஜூன் முதலாம் திகதியில் இருந்து அனைத்து வழிபாட்டு தலங்களும் திறக்கப்படும் என்று அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதியில் இருந்து பொதுமுடக்கம் இருந்து வருகிறது 4ஆம் கட்ட பொது முடக்கம் நாளைமறுநாளுடன் முடிவடைகிறது.

அதன் பின்பும் ஊரடங்கு நீட்டிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மேலும் பல தளர்வுகள் அளிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

கடந்த 65 நாட்களுக்கு மேலாக எந்த வொரு வழிபாட்டு தலங்களும் திறக்கப்படாமல் உள்ளன. பொதுமக்கள் அதிகமாகக் கூடினால் கொரோனா தொற்று வேகமாகப் பரவிவிடும் என்பதால் முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜூன் முதலாம் திகதியில் இருந்து மேற்கு வங்காளத்தில் இந்து கோவில்கள், மசூதி, குருத்வாரா உள்பட அனைத்து வழிபாட்டு தலங்களும் திறக்கப்படும். ஆனால் 10 பேருக்கு மேல் அனுமதிக்கக் கூடாது. மதம் தொடர்பான இடங் களில் கூட்டத்திற்கு அனுமதி இல்லை என்று அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

# இந்திய மக்களுக்கு கடிதம் எழுதுகிறார் பிரதமர் மோடி



இந்திய மக்களுக்குப் பிரதமர் மோடி கடிதம் எழுத உள்ளார், அனைத்து மொழிகளிலும் அந்த கடிதம் இன்று வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டு மக்களுக்கு பிரதமரின் கடிதம். அனைத்து மொழி செய்தித்தாள்களிலும் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று இந்தியாவில் கண்டறியப்பட்டபோது பொது ஊரடங்கு உத்தரவை பிரதமர் மோடி தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றி தெரிவித்தார். அதன்பிறகும் ஒன்றிரண்டு முறை பேசினார். 4ஆவது கட்ட ஊரடங்கு நீட்டிக்கப்படும்போது அவர் உரையாற்றவில்லை. மத்திய உள்துறை அமைச்சகம் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நாளை மறுநாளுடன் மே 31ஆம் திகதி 4ஆம் கட்ட ஊரடங்கு உத்தரவு முடிவுக்கு வருகிறது. அதன்பின் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து நேற்றுப் பிரதமர் மோடி உள்துறை அமைச்சர் அமித் ஷ உடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி கடிதம் எழுதுகிறார். அனைத்து மொழிகளிலும் அந்தக் கடிதம் வெளியாகும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# குருதி மாதிரிகளைத் திருடிய குரங்கால் பெரும் பரபரப்பு

## கொரோனாவைப் பரப்புமோ என்று மக்கள் அச்சம்

உத்தர பிரதேசம் மாநில மீரட் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவனையில் இருந்து குரங்கு ஒன்று கொரோனா விடுதியிலிருந்த நோயாளிகளின் குருதி மாதிரிகளைத் திருடிச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீரட்டில் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு கொரோனா மருத்துவ விடுதி உருவாக்கப்பட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனை வளாகத்தில் மரம் ஒன்று உள்ளது. இந்த மரத்தின் மீது குரங்கு ஒன்று அமர்ந்து மருத்துவமனையின் ஊழியர்களை தாக்கி குருதி மாதிரிகளையும், அறுவைச் சிகிச்சை க்ளோவ்ஸ் – களையும் திருடி வந்து சாப்பிட முயற்சி செய்வது போன்ற வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வந்தது.

கொரோனா வைரஸ்க்கான விடுதியில் இருந்து குருதி மாதிரிகளை திருடி வந்ததால் அக்கம்பக்கம் பொதுமக்கள் அச்சம் அடைந்தனர்.

நடந்த சம்பவம் உண்மைதான், ஆனால் குரங்கு திருடிச் சென்றது தொண்டையில் இருந்து எடுக்கப்பட்ட சளி மாதிரி இல்லை என்று மருத்துவமனை அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இது குறித்து மருத்துவமனை முதல்வர் மருத்துவர் எஸ்.கே. கார்க் கூறுகையில் “குரங்கு திருடிச் சென்றது கொரோனா டெஸ்ட் மாதிரிகள் அல்ல. ஆனால், கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து பரிசோதனைக்காக குருதி சேகரிப்பது வழக்கமான நடைமுறைதான். ஆனால் குரங்கு திருடிச்சென்றது புதிதாக எடுக்கப்பட்ட குருதி மாதிரிகள்.

கொரோனா மாதிரிகள் சேகரிக்கப்பட்டு குளிர்ந்த பாக்சில் வைத்து கொண்டு செல்லப்படும். அது திறந்த வெளியில் வைக்கப்படாது. குரங்கில் இருந்து மனிதர்களுக்கு கொரோனாத் தொற்று பரவும் என அறிவியல் பூர்வமாக கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த சம்பவத்தால் கொரோனா வைரைஸ் பரவ வாய்ப்பு இருக்குமோ என அருகில் உள்ளவர்கள் அச்சப்படத்தேவையில்லை” என்றார்.




# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 1



படம் 2

| படம் 1 | படம் 2 |
|---|---|
| பி. துர்ஷிகா - தரம் 6 | டி. ஹரிஸ்மன் - தரம் 8 |
| தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி |

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'பாய்மரக் கப்பல்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'ஜல்லிக்கட்டு'**

த. கபிலாஷ் – தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் – தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எஸ். சிவசாகித்தியன் – தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ். டிஷ்ஹான் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

விஜயநிதி கருன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். சுஜினா – தரம் 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

எஸ். சாருகா – தரம் 9
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

கே. நியுஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

விஜயநிதி கம்ருன் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என் வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு – தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

ஆர். பிரீதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

க. சஜெந்தன் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

திலகராஜ் திலக்சயன் – தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

அத்வைதா கோபிநாத் – தரம் 1
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

ஏ. ஹம்சாஜினி – தரம் 10
தி/ விபுலானந்தா வித்தியாலயம்

எட்ரியன் லுகி ஜோன் – தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

சுமன்ராஜ் சஷ்வந் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். அஜின் – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பி. மருா டிலுக்ஷி – தரம் 8
தி/ சென். மேரிஸ் கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் – தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

கசிந்திரா கிரிஸ்பின் – தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ஏ. அக்சயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ச. பவினா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ருகையா ரியாஸ் – தரம் 5
கல்கின்ன மாதிரி ஆரம்பப் பாடசாலை

ஹொபின்சன் ஷெர்வின் – தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

என். கொட்வின் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். ஆ. எஸ். பர்வின் – தரம் 8
ஹிஜ்ரா முஸ்லிம் கனிஷ்ர வித்தியாலயம், அம்பன்பொல

# விமான நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனை

## சுகாதார அமைச்சர் பணிப்பு



கொழும்பு, மே 29

கட்டுநாயக்கசர்வதேசவிமானநிலையத்தில்கொரோனா தொற்றை கண்டறியும் பி.சி.ஆர். பரிசோ தனைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதை அடுத்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சுகாதார அமைச்சர் பவித்திர வன்னியாராய்ச்சி அறிவுறுத்தியுள்ளார்.

சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சுகாதார அமைச்சர் நேற்றைய தினம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைவாக, தேவைப்படும் உபகரணங்களை உடனடியாக வழங்குமாறு சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

விமான நிலையத்தில் கடமையில் உள்ள பாதுகாப்பு படையினர், குடிவரவு மற்றும் குடியகழ்வு அதிகாரிகள் ஆகியோருக்கு கொவைட் - 19 கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் குருநாகலில் சிக்கினர்

கொழும்பு, மே 29

குருநாகல் மாவட்டம் பொல்பிதிகம, நிகவெவ பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை, இது தொடர்பாக பொல்பிதிகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டது.

இதன்போது, 1,000 ரூபா போலி நாணயத்தாள்கள் 13 ஐ தமது உடமையில் வைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச்சந்தேகநபர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில், சந்தேக நபர் ஒருவரின் வீட்டிலிருந்து மேலும் 1,000 ரூபா போலி நாணயத்தாள்கள் 37 மற்றும் மடிகணினியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பம்பரகஸ்வெவ, கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 17, 29 வயதுகளையு டைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் களை இன்று மஹவ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் எடுத்துள்ளனர்.

# தொண்டாவுக்கு இன்று நல்லூரில் மௌனாஞ்சலி

மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு இன்று காலை 10 மணியளவில் யாழ்.நல்லை ஆதீன முன்றிலில் மௌன மலர் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இவ்வஞ்சலி நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர்எஸ்.பாலச்சந்திரன்,யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ் ஸ்ரீ நாகவிகாரை பிரதமகுரு, நல்லை ஆதீன சுவாமிகள், சின்மயா மின் சுவாமிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று யாழ்.மாவட்ட நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பரம் மோகன் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் கத்திக்குத்துகள் பெண்கள் உட்பட மூவர் காயம்

வவுனியாவில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவங்களில் பெண்கள் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று மாலை இடம்பெற்ற இருவேறு கத்திக்குத்துச் சம்பவங்களில் இரண்டு பெண்கள் உட்பட மூன்றுபேர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காதல் விவகாரம் காரணமாக கற்பகபுரம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் படுகாமடைந்துள்ளனர்.

அலகல்லு பகுதியில் இடம்பெற்ற கத்திகுத்து சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மாமருந்தாய் இருப்பவனே நீயருளல் வேண்டுமையா!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண், ஆஸ்திரேலியா

நிலமீது உள்ளவர்கள் நிம்மதியாய் வாழ்வதற்கு
அளவற்ற ஆண்டவனே அருள்புரிய வேண்டுமையா
உளமுடைந்து உள்ளார்கள் பலபேர்கள் உய்வுபெற
அளவற்ற ஆண்டவனே அவர்பக்கம் பாருமையா!

நோயென்னும் பெயராலே பேயொன்று வந்திருக்கு
தாயாக இருப்பவனே பேயழிய உதவிடுவாய்
வைத்தியனாய் வந்திருந்து மருத்துவமே பார்த்தவனே
வையத்தின் துயர்களைய வந்திடுவாய் ஆண்டவனே!

கல்லோடு கட்டியே கடலிலே போட்டாலும்
தெப்பமாய் மாற்றியே திருவருளைத் தந்திடுவாய்
பொல்லாத நோயாலே பொசுங்கிறார் மாநிலத்தில்
வல்லவனே நல்லருளை தந்திடுவாய் மக்களுக்கு!

மருந்துகாண முடியாமல் மருத்துவர்கள் திணறுகிறார்
பாலருந்தும் பசுங்குழந்தை நோய்கண்டு மடிகின்றார்
மார்க்கண்டை யமன்பிடிக்க காலாலே உதைத்தவனே
மாநிலத்தை பிடிக்கும்யமன் மாண்டுவிடச் செய்துவிடு!

ஆணவத்தை விட்டகலா மானிடர்கள் இருக்கின்றார்
அவராலே மக்கள்பலர் அல்லலினை அடைகின்றார்
நோயோடு ஆணவமும் கைகோர்த்து அழிக்கிறதே
நுண்ணறிவே நுண்ணுணர்வே நோக்கிடுவாய் திருப்பார்வை!

படைத்தவனே பரம்பொருளே பாருலைகைப் பாரையா
பலர்மடிந்தும் பலரழுதும் பார்சிதறிக் கிடக்கிறது
மருத்துவத்தைத் தலைகுனிய வைத்திருக்கு கொரனோவும்
மாமருந்தாய் இருப்பவனே நீயருளல் வேண்டுமையா!

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction,
Stanley Road, Jaffna.
Northern Pc Park 077 757 0124 021 567 5566
NPcpark 077 336 6443 021 222 9581
northernpcpark 075 555 7327 021 222 2050
Northern PC Park 071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு
சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின்
கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை
பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப்
பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# 176 இந்தியர்கள் கொழும்பிலிருந்து நேற்று இந்தியா சென்றடைந்தனர்











இலங்கையில் சிக்கித் தவித்த 176 இந்தியர்களுடன் முதலாவது சிறப்பு ஏர்இந்தியா விமானம் நேற்று கொழும்பிலிருந்து மும்பை, புவனேஸ்வர் மற்றும் கொல்கத்தாவுக்கு சென்றடைந்ததாக கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கோவிட் – 19 தொற்றுநோயால் உலகம் முழுவதிலுமிருந்து சிக்கித் தவிக்கும் இந்தியரை நாட்டிக்கு மீட்டுக்கொள்ளும் 'வந்தே பாரத் மின்' வேலைத்திட்டத்தின் கீழ் இந்த விமானம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளுடன் உரையாடி அவர்களை வழியனுப்பி வைத்தார்.

இதை தவிர, இலங்கையில் சிக்கித் தவிக்கும் ஏறக்குறைய 700 இந்தியர்களை திருப்பி அனுப்புவதற்காக இந்திய கடற்படைக் கப்பல் ஜலாஷ்வா திங்களன்று கொழும்பு துறைமுகத்திலிருந்துதூத்துக்குடிக்கு பயணத்தை ஆரம்பிக்கும். இலங்கை அரசாங்கத்துடன் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையில் இருந்து இந்தியர்களை திருப்பி அனுப்புவதக்கு ஒத்துழைத்தமைக்காக இலங்கை அரசுக்கு உயர் ஸ்தானிகர் நன்றி தெரிவித்தமையோடுப்சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம், உள்துறை அமைச்சகம், வெளிவிவகார அமைச்சு , உலகெங்கிலும் உள்ள இந்திய தூதரகங்கள் மற்றும் இந்தியாவில் உள்ள மாநில அரசுகளின் கூட்டு முயற்சிதான் 'வந்தே பாரத் மின் 'என்பதை அவர் எடுத்துரைத்தார்.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# ஆடைகளை அணிந்து பார்த்து கொள்வனவு செய்வதற்குத் தடை

ஆடை விற்பனை நிலையங்களில் ஆடைகளை அணிந்து பார்த்து கொள்வனவு செய் வது சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய தடை செய்யப்பட்டுள்ளதால், வாடிக்கையாளர்கள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆடைகளை அணிந்து பார்க்க தடை விதிக்கப்பட்டுள்ளமையுடன் ஆடைகளை திரும்பப் பெறுவதிலும் கடும் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க வழங்கியுள்ள சுகாதார வழிக்காட்டல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் ஆடைகளை அணிந்துபார்த்துகொள்வனவு செய்வதில் முக்கியத்துவத்தை கொடுப்பவர்கள் என்பதால், இந்த தீர்மானம் காரணமாக பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

ஆடை விற்பனை நிலையங்களிலும் ஒரு மீற்றர் இடைவெளியை பேண வேண்டும். அத்துடன் தாமாகவே துணிகளை கொள்வனவு செய்யும் முறை, தொடர்புகள் இன்றி பணம் செலுத்த வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர், வாடிக்கையாளர்கள் வரிசைகளில் நிற்பதையும் குறைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

# பஸ் பயணக் கட்டணங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை

பஸ்களில் ஆசன எண்ணிக்கைக்கு அமைய பயணிகளை ஏற்றும் நடை முறையை சட்டமாக்க எதிர்பார்த்துள்ளதாக, போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ள விடயம் குறித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் தரப்பு பல்வேறு கருத்துகளை முன்வைத்து வருகிறது.

இந்த நடைமுறை சட்டமாக அமுலாகும் பட்சத்தில், பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரின் இந்த யோசனையைத் தாங்கள் ஏற்கின்றனர் எனத் தெரிவித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, மாறாக கட்டண அதிகரிப்பு குறித்து அமைச்சர் கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

ஜல்லிக்கட்டு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

**இன்று (30/05/2020) தலைப்பு ஜல்லிக்கட்டு**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# தொண்டமானின் பூதவுடல் ஊருக்கு ஹெலியில் எடுத்துச் செல்லப்பட்டது









அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் கொழும்பிலிருந்து அவரது சொந்த ஊரான ரம்பொடை வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலிக்காக வைப்பதற்காக எடுத்துச்செல்லப்பட்டது.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விசேட ஹெலிக்கொப்டரில் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அமரர் ஆறுமுகனின் பூதவுடலை எடுத்துச் சென்ற ஹெலிக்கொப்டர், கம்பளையில் மைதானம் ஒன்றில் தரையிறங்கியது. அங்கிருந்து பூதவுடல் தரைவழியாக மக்கள் அஞ்சலியுடன் இறம்பொடை, வேவண்டனுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.





# மலையகத் தமிழர்கள் ஈழவாதிகளாக மாற தொண்டா ஒருபோதும் இடமளிக்கவில்லை

## எஸ்.பி. திஸநாயக்கா கூறுகின்றார்



கொழும்பு,மே.30

மலையகத் தமிழர்களை ஈழவாதியாக மாற்றுவதற்கு, அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஒரு போதும் இடமளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, முன்னாள் அமைச்சர் ரிாத் பதியுதின் மீது கொலைக் குற்றச்சாட்டுகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

பத்தரமுல்ல – நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போதுத் தொடர்ந்து கருத்துரைத்த அவர்–

வேட்புமனுக்கள் விடுமுறைத் தினத்தில் தாக்கல் செய்யப்பட்டன எனத் தற்போது குற்றஞ்சுமத்துபவர்கள், வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும்போது எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. – என்றார்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும்போது அமைதியாக இருந்த எதிர்க்கட்சியினர், உளவியல் ரீதியாக அச்சமடைந்துள்ளனர் எனக் கூறிய அவர், ஐக்கியத் தேசியக் கட்சியினருக்கு இடையே ஏற்பட்டிருக்கும் பிளவால், பொதுத்தேர்தலில் பாரிய வெற்றியை பெறுவோமெனவும் தங்களது வெற்றியை முன்கூட்டியே எதிர்க்கட்சியினர் தெரிந்து வைத்திருந்ததாலேயே அவர்கள் அச்சமடைந்துள்ளனர் எனவும் கூறினார்.

கடந்த 20 நாள்களுக்கு மேலாக, சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை என்றும் கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதியானதைத் தொடர்ந்து, அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஐ.தே.க. முன்னோக்கிச் செல்வதை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது!

## ருவன் விஜேவர்தன திட்டவட்டம்

**ஐக்கிய தேசியக் கட்சி என்பது ரணிலோ அல்லது சஜித்தோ அல்லது கபீர் ஹாசீமோ அல்ல. இது கிராமபுறங்களைச் சேர்ந்த ஆதரவாளர்களால் பாது காக்கப்பட்டு வரும் கட்சியாகும். எனவே, தற்போதைய தலைவர் ரணில் விக்கி ரமசிங்க தலைமைத்துவத் திலிருந்து விலகிச் சென்றாலும் ஐ.தே.க. முன்னோக்கிச் செல்வதை யாராலும் தடுக்க முடியாது.**



- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தன தெரி வித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சியிலிருந்து விலகிச் சென்று ஐக்கிய மக் கள் சக்தியுடன் இணைந்துகொண்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் எமது கட்சியின் உறுப்பு ரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று அவர்களுக் குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோன்று சுயாதீனமாகவும், வேறு கட்சிகளுட னும் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடத் தீர் மானம் எடுத்துள்ள எமது கட்சியின் உறுப்புரிமை பெற் றிருந்தவர்களின் உறுப்புரிமையை நீக்குவதற்காக மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது. அதற்கு நாங்கள் இணக்கம் தெரிவித்தை அடுத்து அவர்களுக் குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 99 பேர் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கட்சியில் காணப்பட்ட இடைவெளியை நிரப்புவதற்காக மத்திய செயற்குழு புதிய நியமனங்க ளையும் வழங்கியுள்ளது. அதற்கமைய கட்சியின் பொதுச் செயலாளராகத் தொடர்ந்தும் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் நியமிக் கப்பட்டுள்ளார். உப தலைவராக முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவும் , தேசிய அமைப்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தற் போது எமது கட்சியின் தலைவர் மற்றும் பிரதித் தலை வருக்கிடையில் இடைவெளி இருக்கின்றது. அது தொடர் பில் எதிர்வரும் தினங்களில் தீர்மானம் எடுப்போம். இதேவேளை கட்சியின் பொருளாளராக சட்டத்தரணி பிஸ்மா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதன்போது கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க எமக்கு எப்போதுமே தேசிய அரசு அமைப்பதற் கான எண்ணம் இல்லை என்று தெரிவித்துவிட்டார். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் மக் களின் நலனைப் பாதுகாப்பதே எமக்கு அவசியமாகும்.

அதனால் மக்களின் பொருளாதார மற்றும் வாழ் வாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படு வதுடன், மக்களின் உரிமைகளை மீறும் வகையிலும், அவர்களைப் பாதிக்கும் வகையிலும் அரசு தீர்மானங் கள் எடுத்தால், அதனை எதிர்த்துக் குரல் எழுப்பவும் பின் வாங்க மாட்டோம். எமது கட்சியின் செயற்குழுவுக்குப் புதிதாக 08 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி என்பது ரணில் விக்கிரமசிங் கவோ, சஜித் பிரேமதாசவோ அல்லது கபீர் ஹாசீமோ கிடையாது. ஐ.தே.க. என்பது நாமே. அன்றிலிருந்து இன்றுவரை ஐ.தே.கவைப் பாதுகாத்து வருவது கிராம ங்களைச் சேர்ந்த எமது ஆதரவாளர்களே.

இது வெறுமன கட்சியல்ல; பலம் வாய்ந்த கட்சி யாகும். இன்று இதன் தலைமைத்துவத்தை விட்டு ரணில் விக்கிரமசிங்க விலகிச் சென்றாலும் புதிய தலை வருடன் கட்சி முன்னேறிச் செல்வதை யாராலும் தடுக்க முடியாது. தற்போது கட்சியின் ஆதரவாளர்கள் யாரைச் சுற்றி இருந்தாலும் அவர்கள் இறுதியில் யானைக்கே வாக்களித்துச் செல்வார்கள். மத்திய செயற்குழு நீக்கத் தீர்மானித்துள்ளவர்கள் விரும்பி னால் மீண்டும் கட்சியுடன் இணைந்து பயணிக்க முடியும் - என்றார்.

# 'பேஸ்புக்' காதலியைச் சந்திக்க வந்தவரை தாக்கி மண்டையை உடைத்துக் கொள்ளை

## யாழ்ப்பாணத்தில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், மே 30

பேஸ்புக் காதலியை பார்க்க வந்த இளைஞரை வழிமறித்து தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்று அவரி டம் இருந்து கைத்தொலைபேசி மற்றும் ஒரு தொகை பணத்தினையும் பறித் துச் சென்றுள்ளது.

கொக்குவில் பொற்பதிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் நடந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் இளைஞருடை தலையில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரி யவருவது:-

ஆவரங்கால் பகுதியில் உள்ள இந்த இளைஞர் பேஸ்புக்கில் ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு உரையாடிவந்துள்ளார்.

இந்நிலையில் இன்று மதியம் இருவரும் இராம நாதன் வீதியில் உள்ள ராஜா கிறீம் ஹவுஸில் சந்திப்ப தாக செய்தி பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இதன்படி இருவரும் பேசிவைத்து நேரத் திற்கு அந்தச்இளைஞர் அங்கு வந்துள்ளார். இருப்பினும் அந்த பெண் அங்கு வரவில்லை.

இந்நிலையில் அங்கு 3 மோட்டார் சைக் கிளில் வந்த இளைஞர்கள் தாங்கள் பொலிஸ் என்று அடையாளப் படுத்திக் கொண்டமை யுடன், அந்தச்இளைஞரை விசா ரிக்க வேண் டும், அதனால் தங்களுடன் வருமாறு கூறி மோட்டார் சைக்கிளில் இழுத்து ஏற்றியுள்ளனர்.

அங்கிருந்து கொக்குவில் பெற்பதி வீதிக்கு வந்த அந்த கும்பல், அங்குள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு பின் னால் வைத்து அந்த இளை ஞரைத் தாக்கியுள்ளனர்.

அத்துடன் அவரிடம் இருந்த கைத்தொலை பேசி மற்றும் பணத்தைப் பறித்துள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பி ஓடிய குறித்த இளைஞர் அப்பகுதியில் உள்ள வீடொன்றின் முன்னால் விழுந்துள்ளார்.

சிறிது நேரம் அங்கு நின்று அந்த இளைஞர் குழு பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென் றுள்ளது. இதன் பின்னர் தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் இரத்தம் வழிந்த வாறு வீதிக்கு வந்த இளைஞர் அங் கிருந்து வர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# திருமலை மீனவர் பிரச்சினைகள் பற்றி டக்ளஸ் தலைமையில் இன்று ஆராய்வு

எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட ஆராய்வு கூட்டம்!

திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் அம்மாவட்ட கடற்றொழி லாளர் சமாசங்களுடனான ஆராய்வுக் கூட்டம் ஒன்று கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை 30 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தின் உப்பு வெளி பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆராய்வு கூட்டத்தின்போது திருகோண மலை மாவட்டக் கடற்றொழிலளர்கள் அவர்களது கடற் றொழில் நடவடிக்கைகளின்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் - குறிப்பாக சுருக்குவலை உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை தடைசெய்த உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் - தொடர்பில் ஆராயப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2020 இல் வெளியிடப்பெற்றது.